# TAMIL NADU GOVERNMENT ARTS AND SCIENCE COLLEGES ADMISSIONS - 2020
# தமிழ்நாடு அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரிகள் மாணவர் சேர்க்கை - 2020

**<u>பதிவு செய்யும் முறை</u>**

தமிழ்நாடு அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரிகளின் மாணவர் சேர்க்கை - 2020 (TNGASA- 2020) என்பது இணையவழி விண்ணப்ப பதிவு மற்றும் சான்றிதழ்களை பதிவேற்றம் செய்வதாக அமையும். விண்ணப்பத்திற்கான தகவல்களைப் பதிவு செய்தல், விருப்பமான கல்லூரிகள் மற்றும் பாடப்பிரிவைப் பதிவு செய்தல், பதிவு செய்வதற்கான பணத்தைச் செலுத்துதல், விண்ணப்பத்தை பதிவிறக்கம் செய்தல் மற்றும் சான்றிதழ்களை பதிவேற்றம் செய்தல் ஆகிய அனைத்தும் இணையவழியாகவே நடத்தப்படும்.

கலந்தாய்வின் நடைமுறைகள் கீழே பட்டியலிடப்பட்டுள்ள பின்வரும் படிகளைக் கொண்டுள்ளது:


1. விண்ணப்பத்தை பூர்த்தி செய்ய தாங்கள் வீட்டிலிருந்தோ அல்லது வேறு எங்கிருந்து வேண்டுமாயினும் இணையதளம் வாயிலாக பதிவு செய்யலாம். இணையதள வசதி இல்லாதவர்கள், ஒவ்வொரு மாவட்டத்திலும் தேர்ந்தெடுக்கப்பட்ட அரசு கலைக் கல்லூரிகளில் உள்ள **மாவட்ட உதவி மையம் (DISTRICT FACILITATION CENTRE)** மூலம் இதைச் செய்யலாம்.
2. பாடப்பிரிவுகள் மற்றும் கல்லூரிகளை விருப்பப்படி பதிவு செய்தல்.
3. சான்றிதழைப் பதிவேற்றுவது தாங்கள் வீட்டிலிருந்தோ அல்லது வேறு எங்கிருந்து வேண்டுமாயினும் இணையதளம் வாயிலாக பதிவு செய்யலாம். இணையதள வசதி இல்லாதவர்கள், ஒவ்வொரு மாவட்டத்திலும் தேர்ந்தெடுக்கப்பட்ட அரசு கலைக் கல்லூரிகளில் உள்ள மாவட்ட உதவி மையம் **(DISTRICT FACILITATION CENTRE)** மூலம் இதைச் செய்யலாம்.
4. தரவரிசை பட்டியல் வெளியிடுதல்.(அந்தந்த கல்லூரிகள் தரவரிசை பட்டியலை வெளியிடுதல்)
5. விண்ணப்பதாரர்கள் தங்கள் பதிவு செய்த பாடப்பிரிவுகளின்விருப்ப வரிசையின் அடிப்படையில் தரவரிசைக்கு ஏற்றவாறு ஒதுக்கீடு ஆணை அந்தந்த கல்லூரிகள் வழங்கும்.

6. விண்ணப்பதாரர்கள் தங்களுக்கு வழங்க பட்ட ஒதுக்கீடு ஆணையின் அடிபடையில் அந்தந்த கல்லூரிகளுக்கு சென்று சேர்க்கையை உறுதி செய்தல்.


விண்ணப்பதாரர்கள் மேலே உள்ள எல்லா விவரங்களையும் அவை செய்யப்பட வேண்டிய நாட்களையும் உரிய நேரத்தில் கவனித்து செயல்பட வேண்டும். எல்லாவற்றுக்குமான முதற்படி, விண்ணப்பத்தை பதிவு செய்தல். அதை எவ்வாறு செய்வது என்பதை இந்த குறிப்பு விவரிக்கிறது.

## 1. பயனாளர் பதிவு செய்தல்

இப்போது நாம் விண்ணப்பம் பதிவு செய்வது எப்படி என்று பார்க்கலாம்.பதிவு செய்தலை எளிதாக்க, அது பல எளிய படிகளாக மேற்கொள்ளப்பட்டுள்ளன. இப்படிகளை கவனமாக தொடருங்கள். முதலாவதாக http://tngasa.in/ மற்றும் http://tndceonline.org/ . என்ற இணையதளத்திற்கு செல்லவும். தற்பொழுது நீங்கள் கீழே காணும் கணினி பக்கத்தை காண்பீர்கள்.




இப்போது**"New Registration"**என்பதை கிளிக் செய்யவும். இப்போது கீழ்க்காணும் இணைய பக்கம் கணினி திரையில் தோன்றும்.





**வழிமுறைகள்**

1. தமிழ்நாடு கலை மற்றும் அறிவியல் கல்லூரிகள் சேர்க்கை 2020, விண்ணப்பப் பதிவு என்பது ஒரு முழுமையான இணையவழி செயல்முறையாகும், இதில் மாணாக்கர் பதிவு, விண்ணப்பம் நிரப்புதல், கல்லூரித் தேர்வு, விண்ணப்பக் கட்டணம் செலுத்துதல் , விண்ணப்பப் பதிவிறக்கம் மற்றும் சான்றிதழ் பதிவேற்றம் ஆகியவை அடங்கும்.
2. மாணாக்கர்கள் தங்கள் ஆலோசனை மற்றும் சேர்க்கைகளை வெற்றிகரமாக முடிக்க இங்கே கொடுக்கப்பட்டுள்ள வழிமுறைகளை முழுமையாக படிக்குமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

☑I have read and agree to the Terms and Conditions (நான் விதிமுறைகளையும் நிபந்தனைகளையும் படித்து ஒப்புக்கொள்கிறேன்) என்பதை முழுமையாக படித்துவிட்டு பின்பு டிக் செய்து, submit பட்டனை கிளிக் செய்யவேண்டும்.

இப்போது கீழ்க்காணும் இணைய பக்கம் கணினி திரையில் தோன்றும். அதில் **“Registration”** என்ற பகுதியில் செய்ய வேண்டிய செயல் என்ன என்பதை தற்போது காட்டுகிறது.





விண்ணப்பப் பதிவு பயனாளர் பதிவுக்கான விவரங்கள் பதிவிடல் மேற்கண்ட இணைய பக்கத்தில் உள்ள எல்லா விவரங்களையும் சரியாக பதிவு செய்யவும். விவரங்களை பதிவு செய்கையில் கீழ்க்கண்டவற்றை மனதில் கொள்ளவும்.

1. உங்கள் பெயரை, உங்கள் பத்தாம் வகுப்பு /+2 மதிப்பெண் சான்றிதழில் உள்ளது போல பதிவு செய்யவும்
2. கொடுக்கப்பட்ட திறன்பேசி **(Smart Phone)** எண், உங்கள் பதிவு செய்யப்பட திறன்பேசி எண்ணாக கருதப்படும். இதன் மூலமாகவே எல்லா குறுந்தகவல்களும் அனுப்பப்படும்.
3. மின்னஞ்சல் முகவரி என்பதில் உங்களது சரியான மின்னஞ்சல் முகவரியைக் **(email Id)** கொடுக்கவும். உங்களுக்கான மின்னஞ்சல் முகவரி இல்லாவிட்டால் புதிதாக ஒன்றை உருவாக்கி, பின் பதியவும். மின்னஞ்சல் முகவரி உருவாக்குவதில் சிரமம் இருந்தால் உங்கள் பெற்றோரின் மின்னஞ்சலைப் பயன்படுத்தலாம். இந்த மின்னஞ்சல் முகவரியே உங்கள் பதிவு செய்யப்பட்ட மின்னஞ்சல் முகவரியாக கருதப்படும். இதன் மூலமாகவே எல்லாத் தகவல்களும் அனுப்பப்படும்.
4. உங்களது கடவுச்சொல்லை **(Password)** கவனமாக உருவாக்கிக் கொள்ளவும். கடவுச் சொல்லானது குறைந்தது ஆறு எழுத்துகளைக் கொண்டது. அதில் குறைந்தது ஒரு எழுத்து எண்ணாகவும், ஒரு எழுத்து சிறப்பு எழுத்தாகவும் **(Special Character)** மற்றவைஎழுத்தாகவும் **(Letter)** இருக்க வேண்டும்.


5. இங்கு கொடுக்கப்பட்ட விவரங்களைப் பின்னர் மாற்ற இயலாது. எனவே உறுதி செய்வதற்கு முன் சரிபார்த்து உறுதி செய்யவும்.

உங்கள் மின்னஞ்சல் **(Email id),** மற்றும் கடவுச்சொல் **(Password)** ஆகியவற்றை கவனமாக நினைவில் வைத்துக் கொள்ள வேண்டும். இவற்றை நீங்கள் பலதடவை பயன்படுத்த வேண்டியிருக்கும். பத்திரமாக எங்காவது எழுதிவைத்தாலும் நலம்.


இந்த விவரங்களை முடித்த பின் **"Submit"** என்ற பட்டனை கிளிக் செய்யவும். அப்பொழுது உங்கள் திறன்பேசிக்கு **(Smart Phone)** வரும், ஒரு முறை பயன்படுத்தும் கடவுச்சொல் **(OTP)** எண்ணை பதிவு செய்யவும், இதில் **"Submit"** என்பதை கிளிக் செய்யவும். திரையில் உங்கள் விண்ணப்படிவ எண் தோன்றும் அதில் உள்ள **"login"** பட்டனை கிளிக் செய்யவேண்டும்.




தற்போது தங்கள் பதிவு செய்த திறன்பேசி **(Smart Phone)** எண்ணுக்கு மின்னஞ்சல் முகவரி **(Email Id)** மற்றும் கடவுச்சொல் குறுந்தகவலாக அனுப்பப்படும். இனி நீங்கள் எப்போது வேண்டுமாயினும் **TNGASA** இணையதளத்தில் உங்கள் மின்னஞ்சல் முகவரி **(Email Id)** மற்றும் கடவுச்சொல்லை **(Password)** பயன்படுத்தி உள்நுழைவு **(Login)** செய்து கொள்ளலாம்.




இப்பொழுது உள்நுழைவு **(Login)** செய்தால் கீழ்க்கண்ட கணினி திரை தோன்றும்.




தற்போது விண்ணப்பம் பதிவு செய்தலுக்கான முதல் படிநிலை நிறைவடைந்ததுள்ளது.

## 2. விண்ணப்பப் பதிவு செய்தல்


தற்பொழுது **"Application"** தேர்வுசெய்யவும். தற்போது விண்ணப்ப படிவ பதிவுக்கான இணையதள பக்கம் தங்களது கணிணியில் தெரிய வரும். விண்ணப்ப படிவ பதிவு நான்கு எளிய படி நிலைகளை கொண்டது, அவை பின்வருமாறு:

- தனிப்பட்டவிவரங்களை பதிவு செய்தல்
- சிறப்பு பிரிவிற்கான விவரங்களை பதிவு செய்தல்
- கல்வித்தகுதி விவரங்களை பதிவு செய்தல்

* மதிப்பெண்கள் விவரங்களை பதிவு செய்தல்


**தனிப்பட்ட விவரங்களை பதிவு செய்தல்.**

* மாணாக்கர் பெயர், பெற்றோர் / பாதுகாவலர் பெயர், பாலினம், பிறந்த தேதி, தேசியம், மாநிலம், மாவட்டம், மதம், இனம், சாதியின் உட்பிரிவு, மாணாக்கர் முகவரியினை கட்டாயமாக பிழையின்றி பதிவு செய்ய வேண்டும்.




**சிறப்பு பிரிவிற்கான விவரங்களை பதிவு செய்தல்.**

- மாற்றுத்திறனாளிகள் / விளையாட்டு பிரிவினர்கள் / முன்னாள் ராணுவ வீரர்கள் / தேசிய மாணவர் படை போன்ற பிரிவுகளில் விண்ணப்பிக்க விரும்புபவர்கள் தேவையானவற்றை தேர்வு செய்ய வேண்டும்





**கல்வித்தகுதி விவரங்களை பதிவு செய்தல்**


- பனிரெண்டாம் (+2) வகுப்பின் பதிவு எண்ணை பிழையில்லாமல் உள்ளீடு செய்ய வேண்டும்.
- பதினொன்றாம் (+1) வகுப்பில் தேர்ச்சியை பதிவு செய்ய வேண்டும்.
- பனிரெண்டாம் வகுப்பில் படித்த பாடப்பிரிவின் வகையை (Academic or Vocational) தேர்வு செய்ய வேண்டும்.
- பனிரெண்டாம் வகுப்பில் படித்த முதன்மை மொழியினை தேர்வு செய்ய வேண்டும்.
- பனிரெண்டாம் வகுப்பில் (+2 ) எந்த வாரியத்தின் கீழ் படித்தீர்கள் என்பதை பதிவு செய்ய வேண்டும்.




## மதிப்பெண்கள் விவரங்களை பதிவு செய்தல்


பனிரெண்டாம் வகுப்பில் **(+2 HSC)**யில் நீங்கள் பெற்ற பாடங்களுக்கான மதிப்பெண்கள் அல்லது வேறு வாரியங்களில் படித்த மாணாக்கர்கள் **+2 (HSC)**க்கு சமமான பாடங்களில் நீங்கள் பெற்ற மதிப்பெண்களை சமர்ப்பிக்கலாம்.







அனைத்து விவரங்களையும் பதிவு செய்த பின் **"Preview & Submit"** பட்டனை கிளிக் செய்ய வேண்டும். அப்போது பதிவு செய்யப்பட அனைத்து விவரங்களை கொண்ட முன்னோட்ட திரை தோன்றும்.

அதில் பெயர், பாலினம், பிறந்ததேதி, இனம், **+2** பாடப்பிரிவு, கல்வி விவரங்கள், மற்றும் சிறப்பு பிரிவிற்கான விவரங்கள் அனைத்தையும் நன்றாக சரிபார்த்து பின்பு, அனைத்து தேர்வுப் பெட்டிகளையும் ☑டிக் செய்ய வேண்டும். பிழை இருப்பின் **"Back to Edit"** என்னும் பட்டனை கிளிக் செய்து பிழைகளை சரி செய்து பின் **"Final Submission"** பட்டனை கிளிக் செய்யலாம் அல்லது பிழையில்லையெனில் நேரடியாக **"Final Submission"** பட்டனை கிளிக் செய்யலாம்.





உங்களது விண்ணப்பத்தில் உள்ள **"Final Submission"** சமர்ப்பித்துவிட்டால் விவரங்களை மாற்றம் செய்ய இயலாது.





தற்போது விண்ணப்பபடிவ பதிவுக்கான இரண்டாம் படிநிலை நிறைவடைந்துள்ளது.

## 3. பாடப்பிரிவுகள் மற்றும் கல்லூரிகளைதேர்வு செய்தல்

தற்பொழுது **"College and Course Selection"** என்பதை தேர்வு செய்யவும்.





தற்போது பாடப்பிரிவுகள் மற்றும் கல்லூரிகளை தேர்வு செய்வதற்கான இணையதள பக்கம் தங்களது கணிணியில் தெரிய வரும்.



கல்லூரிகள் மற்றும் பாடப்பிரிவுகளை தேர்வு செய்வது என்பது மிக முக்கியமான படி நிலைகளில் ஒன்று. மாணாக்கர்கள் தேர்வு செய்யும் முதல் விருப்பமானது முதன்மை விருப்பமாக இட ஒதுக்கீட்டின் போது கருதப்படும். ஆதலால் மிகுந்த கவனத்துடன் தேந்தெடுக்க வேண்டும்.

கல்லூரிகள் மற்றும் பாடப்பிரிவுகளை தேர்வு செய்யும் எளிய படி நிலைகள் பின்வருமாறு:


1. படிக்க விரும்பும் மாவட்டத்தை தேர்வு செய்ய **"College District"** என்பதை கிளிக் செய்ய வேண்டும்.
2. அடுத்தாக படிக்க விரும்பும் கல்லூரியை தேர்வு செய்ய **"CollegeCode &Name"** என்பதை கிளிக் செய்ய வேண்டும்.
3. படிக்க விரும்பும் பயிற்று மொழியை தேர்வு செய்ய **"Medium"** என்பதை கிளிக் செய்ய வேண்டும்.
4. படிக்க விரும்பும் சுழற்சியை தேர்வு செய்ய "**Shift**"என்பதை கிளிக் செய்ய வேண்டும்.
5. படிக்க விரும்பும் பாடப்பிரிவுகளை தேர்வு செய்ய **"Course Name"** என்பதை கிளிக் செய்ய வேண்டும். பாடப்பிரிவுகளின் பெயர்கள் வரிசையாக தோன்றும். அதில் ஏதாவது ஒன்றை தேர்வு செய்ய வேண்டும்.
6. புதிய பாடப்பிரிவை தேர்ந்தெடுக்க மாணாக்கர்கள் **"Add Course"** என்பதை கிளிக் செய்ய வேண்டும். ஒரு மாணாக்கர் எத்தனை பாடப்பிரிவை வேண்டுமென்றாலும் தேர்ந்தெடுக்கலாம்.
7. வேறு கல்லூரியில் படிக்க விரும்பும் மாணாக்கர்கள், தங்கள் திரையில் உள்ள **"Add College"** என்பதை கிளிக் செய்ய வேண்டும். அதில் தோன்றும் மாவட்டம் மற்றும் கல்லூரியை விரும்பும் வகையில் எத்தனை முறை வேண்டுமென்றாலும் தேர்ந்தெடுக்கலாம். (ஒரு மாணாக்கர்கள் ஒரே பாடப்பிரிவை ஒரே கல்லூரியில் மீண்டும் தேர்ந்தெடுக்க இயலாது )
8. இறுதியாக **"Submit"** பட்டனை கிளிக் செய்து சமர்ப்பிக்க வேண்டும்.





தற்போது பாடப்பிரிவுகள் மற்றும் கல்லூரிகளை தேர்வு செய்யும் மூன்றாம் படிநிலை நிறைவடைந்ததுள்ளது.


## 4. பதிவு கட்டணம் பகுதி

தற்பொழுது **"Payment"** தேர்வுசெய்யவும்.





தற்போது பதிவுக் கட்டணத்திற்கான இணையதள பக்கம் தங்களது கணிணியில் தெரிய வரும்.




இதில் நீங்கள் கொடுத்த தகவலின்படி (பதிவுக் கட்டணத் தொகை) எவ்வளவு கட்டணம் செலுத்த வேண்டும் என்பதை காட்டும். இந்தத் தொகையை பற்று அட்டை (Debit Card) / கடன் அட்டை (Credit Card) / இணைய வழி வங்கிக் கணக்கு (Internet Banking), மற்றும் யுபிஐ (UPI யை தேர்ந்தெடுத்து Google Pay, Paytm வழியாக) மூலமாக செலுத்தவேண்டும், (விண்ணப்பக் கட்டணம் இணைய வழியாக மட்டுமே செலுத்த முடியும்). இதை செய்வதற்கு "Pay" என்பதை கிளிக் செய்யவும். பின்பு அதற்கான கட்டணம் செலுத்துவதற்கான வங்கியின் திரை (Gateway) உங்கள் கணினியில் தோன்றும்.


இதில், தொகையை செலுத்தி முடித்தவுடன் உங்கள் செல்பேசிக்கு விண்ணப்ப எண்ணும், பரிவர்த்தனை ஐடியும் அனுப்பப்படும், மேலும் பரிவர்த்தனை ரசீதை அச்சிட்டுக்கொள்ளலாம் **(Print).**




மீண்டும் முகப்பு பக்கத்திற்கு செல்ல **Go to Home page** என்பதை கிளிக் செய்ய வேண்டும். தற்போது விண்ணப்பக் கட்டணம் பதிவு செய்தலுக்கான நான்காம் படிநிலை நிறைவடைந்ததுள்ளது.

## 5. விண்ணப்ப படிவம் தரவிறக்கம் செய்தல்

விண்ணப்பத்தை சமர்ப்பித்தப்பின் கீழ்க்காணும் திரை தோன்றும்.



## Government of Tamil Nadu

Tamil Nadu Government Arts and Science Colleges Admission - 2020

**Application Number : 105192**
விண்ணப்ப எண்

105192

### Personal Information

| | | | |
|---|---|---|---|
| **Name /பெயர்** | Sukumar P | | |
| **Father's/Guardian's Name / தந்தையின் / பாதுகாப்பாளர் பெயர்** | PALANISAMY R | | |
| **Gender / பாலினம்** | Male | **Date of Birth / பிறந்த தேதி** | 10-06-2005 |
| **Email Id / மின்னஞ்சல் முகவரி** | tngasa.2020@gmail.com | | |
| **Mobile No / கைபேசி எண்** | 9600952245 | **Nationality / எந்த நாட்டைச் சேர்ந்தவர்?** | Indian |

| | | | |
|---|---|---|---|
| **Religion / மதம்** | Hindu | **Community / இனம்** | SCA |
| **Caste Name & Caste Code / சாதி பெயர் & சாதி குறியீடு** | Arunthathiyar - 109 | | |
| **Address for Communication / முகவரி** | Dahanalakshmi Nagar,Siddhapudur | | |
| **Taluk / தாலுகா** | COIMBATORE NORTH | **District / மாவட்டம்** | Coimbatore |
| **State / மாநிலம்** | Tamilnadu | **Pincode / அஞ்சல் குறியீடு** | 641044 |

### Special Reservation Information

| | | | |
|---|---|---|---|
| **Whether you have Sports Certificates of District / Divisional / State/ National/ International? / உங்களிடம் மாவட்ட / பிரிவு / மாநில / தேசிய / சர்வதேச விளையாட்டு சான்றிதழ்கள் உள்ளதா?** | No | **Eminent Sports Person / சிறந்த விளையாட்டு நபர்** | No |
| **Ex-Servicemen (Only Army/Navy/ Air force services are Eligible) / முன்னாள் படைவீரர்கள் (தரைப்படை / கடற்படை / விமானப்படை சேவைகள் மட்டுமே தகுதியானவை):** | No | **Differently Abled(Yes / No) / மாற்றுத்திறனாளி(ஆம் / இல்லை)** | No |
| **Differently Abled Type / மாற்றுத்திறனாளியின் வகை** | Not Applicable | | |
| **Tamil Origin from Andaman & Nicobar Island / அந்தமான் & நிக்கோபார் தீவுகளின் தமிழினத்தை சார்ந்தவரா ?** | Yes | **NCC (A) Certificate Holder / என்.சி.சி (ஏ) சான்றிதழ் வைத்திருப்பவர்** | No |

### Academic Information

| | | | | | |
|---|---|---|---|---|---|
| **Board / வாரியம்** | Tamil Nadu Board of Higher Secondary Education, Chennai | **+2 Register No. / +2 பதிவு எண்** | 123456 | **HSC Group / கல்வி முறை** | HSC Academic |

### Marks Information

| S.No. | Subject | Subject Code | Max Marks | Obtained Marks | Year of Passing | Attempts |
|---|---|---|---|---|---|---|
| 1 | Tamil | 01 | 100 | 99 | 2020-07 | 1 |
| 2 | English | 09 | 100 | 99 | 2020-07 | 1 |
| 3 | Statistics | 13 | 100 | 87 | 2020-07 | 1 |
| 4 | Commerce | 25 | 100 | 96 | 2020-07 | 1 |
| 5 | Accountancy | 26 | 100 | 98 | 2020-07 | 1 |
| 6 | Economics | 24 | 100 | 96 | 2020-07 | 1 |
| | | Total Marks | 600 | 575 | | |

### Course and College Information


## Government of Tamil Nadu

Tamil Nadu Government Arts and Science Colleges Admission - 2020

**Application Number : 105192**
விண்ணப்ப எண்

105192

### Personal Information

| | | | |
|---|---|---|---|
| **Name /பெயர்** | Sukumar P | | |
| **Father's/Guardian's Name / தந்தையின் / பாதுகாப்பாளர் பெயர்** | PALANISAMY R | | |
| **Gender / பாலினம்** | Male | **Date of Birth / பிறந்த தேதி** | 10-06-2005 |
| **Email Id / மின்னஞ்சல் முகவரி** | tngasa.2020@gmail.com | | |
| **Mobile No / கைபேசி எண்** | 9600952245 | **Nationality / எந்த நாட்டைச் சேர்ந்தவர்?** | Indian |

| | | | |
|---|---|---|---|
| **Religion / மதம்** | Hindu | **Community / இனம்** | SCA |
| **Caste Name & Caste Code / சாதி பெயர் & சாதி குறியீடு** | Arunthathiyar - 109 | | |
| **Address for Communication / முகவரி** | Dahanalakshmi Nagar,Siddhapudur | | |
| **Taluk / தாலுகா** | COIMBATORE NORTH | **District / மாவட்டம்** | Coimbatore |
| **State / மாநிலம்** | Tamilnadu | **Pincode / அஞ்சல் குறியீடு** | 641044 |

### Special Reservation Information

| | | | |
|---|---|---|---|
| **Whether you have Sports Certificates of District / Divisional / State/ National/ International? / உங்களிடம் மாவட்ட / பிரிவு / மாநில / தேசிய / சர்வதேச விளையாட்டு சான்றிதழ்கள் உள்ளதா?** | No | **Eminent Sports Person / சிறந்த விளையாட்டு நபர்** | No |
| **Ex-Servicemen (Only Army/Navy/ Air force services are Eligible) / முன்னாள் படைவீரர்கள் (தரைப்படை / கடற்படை / விமானப்படை சேவைகள் மட்டுமே தகுதியானவை):** | No | **Differently Abled(Yes / No) / மாற்றுத்திறனாளி(ஆம் / இல்லை)** | No |
| **Differently Abled Type / மாற்றுத்திறனாளியின் வகை** | Not Applicable | | |
| **Tamil Origin from Andaman & Nicobar Island / அந்தமான் & நிக்கோபார் தீவுகளின் தமிழினத்தை சார்ந்தவரா ?** | Yes | **NCC (A) Certificate Holder / என்.சி.சி (ஏ) சான்றிதழ் வைத்திருப்பவர்** | No |

### Academic Information


| | | | | | |
|---|---|---|---|---|---|
| **Board / வாரியம்** | Tamil Nadu Board of Higher Secondary Education, Chennai | **+2 Register No. / +2 பதிவு எண்** | 123456 | **HSC Group / கல்வி முறை** | HSC Academic |

### Marks Information

| S.No. | Subject | Subject Code | Max Marks | Obtained Marks | Year of Passing | Attempts |
|---|---|---|---|---|---|---|
| 1 | Tamil | 01 | 100 | 99 | 2020-07 | 1 |
| 2 | English | 09 | 100 | 99 | 2020-07 | 1 |
| 3 | Statistics | 13 | 100 | 87 | 2020-07 | 1 |
| 4 | Commerce | 25 | 100 | 96 | 2020-07 | 1 |
| 5 | Accountancy | 26 | 100 | 98 | 2020-07 | 1 |
| 6 | Economics | 24 | 100 | 96 | 2020-07 | 1 |
| | | Total Marks | 600 | 575 | | |

### Course and College Information

இப்போது **"Download and print Application"** என்பதில் கிளிக் செய்தால், உங்கள் முழு விண்ணப்ப படிவம் பதிவிறக்கம் செய்யப்படும்.



Back To Home | Print

**Government of Tamilnadu**

Tamilnadu Government Arts and Science Colleges Admission - 2020

**Application Number : 100123**

**Personal Information**

| | | | |
|---|---|---|---|
| Name | | SUKUMAR P | |
| Father's/Guardian's Name | | Palanisamy | |
| Gender | Male | Date of Birth | 2005-07-01 |
| Email Id | | sukumarps91@gmail.com | |
| Mobile No | 9600XXXXX | Nationality | Indian |

| | | | |
|---|---|---|---|
| Religion | Hindu | Community | SCA |
| Caste Name & Caste Code | | Arunthathiyar - 109 | |
| Address for Communication | | 82, Dhanalakshmi Nagar,Siddhapudur | |
| Taluk | Coimbatore | District | Coimbatore |
| State | Tamilnadu | Pincode | 641044 |

**Special Reservation Information**

| | | | |
|---|---|---|---|
| Whether you have Sports Certificates of District / Divisional / State/ National/ International?: | No | Eminent Sports Person: | No |
| Ex-Servicemen (Only Army/Navy/ Air force services are Eligible): | No | Differently Abled Person: | No |
| Differently Abled Type: | | | |
| Tamil Origin from Andaman & Nicobar Island: | No | NCC (A) Certificate Holder : | No |

**Academic Information**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| Board | Tamil Nadu Board of Higher Secondary Education, Chennai | +2 Register No. | 5626554 | HSC Group | HSC Academic |

**Marks Information**

| S.No. | Subject | Subject Code | Max Marks | Obtained Marks | Year of Passing | Attempts |
|---|---|---|---|---|---|---|
| 1 | Tamil | 01 | 100 | 89 | 2020-06 | 1 |
| 2 | English | 09 | 100 | 74 | 2020-06 | 1 |
| 3 | Computer Science | 21 | 100 | 89 | 2020-06 | 1 |
| 4 | Economics | 22 | 100 | 74 | 2020-06 | 1 |
| 5 | Commerce | 19 | 100 | 7 | 2020-06 | 1 |
| 6 | Accountancy | 11 | 100 | 99 | 2020-06 | 1 |
| | | Total Marks | 600 | 432 | | |


**Course and College Information**

இவைகளை அச்செடுத்துக் கொள்ளலாம். அச்செடுத்த படிவத்தில் உரிய இடத்தில் உங்கள் பாஸ்போர்ட் அளவு புகைப்படத்தை ஒட்டி, படிவத்தில் குறிப்பிட்டுள்ள எல்லா சான்றிதழ்களையும், அதன் நகல்களையும் உங்களுக்குக் குறிப்பிட்ட நாளில் **TNGASA** மையத்தில் சரிபார்த்து சமர்ப்பிக்க வேண்டும். இத்துடன் நீங்கள் முறையாக விண்ணப்பிக்க வேண்டியது நிறைவு பெறும்.

## 6. சான்றிதழ்கள் பதிவேற்றம்

பதிவேற்றப்பட வேண்டிய கட்டாய ஆவணங்கள்:

1. பாஸ்போர்ட் அளவு புகைப்படம்
2. ஸ்கேன் செய்யப்பட்ட கையொப்பம்
3. +2 (HSC) மதிப்பெண் சான்றிதழ்
4. சாதிசான்றிதழ்
5. மாற்றுத்திறனாளிகள் / விளையாட்டு பிரிவினர்கள் / முன்னாள் ராணுவ வீரர்கள் / தேசிய மாணவர் படை போன்ற சிறப்பு பிரிவின் கீழ் விண்ணப்பிக்கும் மாணவர்கள் சரிபார்ப்புக்கு அந்தந்த சான்றுகளை பதிவேற்ற வேண்டும்.


Government of Tamil Nadu
Tamil Nadu Government Arts and Science Colleges Admission - 2020
TNGASA - 2020
tngasa.2020@gmail.com
Application Number :105192
Dashboard
Certificates should be in PDF or image format. Photo and sign should be in image format only.
சான்றிதழ்கள் PDF அல்லது பட வடிவத்தில் இருக்க வேண்டும். புகைப்படம் மற்றும் கையொப்பம் பட வடிவத்தில் மட்டுமே இருக்க வேண்டும்.
Upload Profile Photo
உங்களது புகைப்படத்தைப் பதிவேற்றுக
Browse
man_silhouette_clip_art_9
Upload Your Signature Image
உங்கள் கையொப்ப படத்தைப் பதிவேற்றுக
Browse
sign.png
Upload 12th Marksheet
12ம் வகுப்பு மதிப்பெண் சான்றிதழை பதிவேற்றுக
Browse
006-12th-mark-sheet-1-63
Upload Community Certificate
சாதி சான்றிதழை பதிவேற்றுக
Browse
images.jpg
Upload